**O.S. No.111/2012**

**Date:25/07/2019**

**பி.வா.சா-1 திரு.பழனியப்பன், த-பெ.சுப்பன் செட்டியார்**

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 5ம் வகுப்பு படித்துள்ளேன். எனக்கு எழுத, படிக்கத் தெரியுமா என்றால் தெரியும். என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சொத்து கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். வாதி எனக்கு என்ன உறவுமுறை என்றால் எனது தங்கை ஆவார். 2ம் பிரதிவாதி எனக்கு என்ன உறவுமுறை என்றால் என் தம்பி ஆவார். என் அம்மா பெயர் என்ன என்றால் ராஜாமணி ஆகும். என் அப்பாவின் முதல் மனைவி பெயர் என்ன என்றால் முத்துக்கருப்பாயி ஆகும். அவருக்கு பிள்ளைகள் உள்ளதா என்றால் இல்லை. என் அப்பா பெயர் சுப்பன் செட்டியார் என்றால் சரிதான். அவரது வாரிசுகள் யார், யார் என்றால் மல்லிகா, பாண்டி மற்றும் நான் ஆவோம். என் தம்பி எந்த வருடம் பிறந்தார் என்றால் தெரியாது. என் அப்பா எப்போது இறந்தார் என்றால் 1982ல் காலமானார். என் அப்பா இறக்கும் போது 2ம் பிரதிவாதிக்கு எத்தனை வயது இருக்கும் என்றால் சுமார் 3, 4 வயது இருக்கும். 2ம் பிரதிவாதியை படிக்க வைத்து, வளர்த்தது யார் என்றால் என் தாயார் ஆவார். என் அப்பா எந்த வருடம் உயில் எழுதி வைத்தார் என்றால் 12.01.1981ல் எழுதி வைத்தார். அந்த உயில் சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த உயிலை நான் பி.வா.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த உயிலில் சாட்சி கையெழுத்து யார் செய்துள்ளது என்றால் வெள்ளைச்சாமி மற்றும் வெள்ளாண்டி அம்பலம் என்ற ராசு ஆகியோர் சாட்சி கையெழுத்துச் செய்துள்ளனர். அவர்கள் தற்போது உயிரோடு உள்ளார்களா என்றால் இல்லை. இறந்து விட்டனர். அவர்கள் இறப்புச் சான்றிதழ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என் அப்பா உயில் எழுதி வைத்துள்ள விபரத்தை 2ம் பிரதிவாதிக்கு எப்போது சொன்னேன் என்றால் சொல்லவில்லை. என் அப்பா எழுதி வைத்துள்ள உயிலில் எத்தனை வகையான சொத்துக்கள் காண்பிக்கப்பட்டுள்ளன என்றால் ஞாபகம் இல்லை. உயிலில் குறிப்பிட்டுள்ள கிரைய ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என் தம்பிக்கு எந்தெந்த புல எண்களில் சொத்துக்கள் ஒதுக்கப்பட்டுள்ளன என்று என் அப்பா குறிப்பாக உயிலில் சொன்னாரா என்றால் சொல்லவில்லை. அந்த உயிலில் 1 மற்றும் 2ம் பிரதிவாதிகள்

**O.S. No.111/2012, Date:25/07/2019**

**பி.வா.சா-1 திரு.பழனியப்பன், த-பெ.சுப்பன் செட்டியார்**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

சொத்துக்களை அடைந்து கொள்ள வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி பலமுறை சொத்தை பிரிக்கச் சொல்லி என்னிடம் கேட்டாரா என்றால் கேட்கவில்லை. அவர் பலமுறை கேட்டுள்ளார் என்றாலும், அது குறித்து பலமுறை பஞ்சாயத்து வைக்கப்பட்டது என்றாலும் சரியல்ல. உயிலில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களை 2ம் பிரதிவாதிக்கு தெரியாமல் நான் விற்று விட்டேன் என்றாலும், சில சொத்துக்களை அடமானம் வைத்துள்ளேன் என்றாலும் சரியல்ல. உயிலைப் பொறுத்தவரை 2ம் பிரதிவாதிக்கு என்ன பாகம் என்றே தெரியாது என்றால் சரிதான், எனக்கும் தெரியாது, சொத்துக்களை இன்னமும் பிரித்துக் கொள்ளவில்லை. எனக்கும், என் தம்பிக்கும் வயது வித்தியாசம் அதிகம் உள்ளது என்றால் சரிதான். தாவாச் சொத்தில் கிணறு உள்ளது என்றால் சரிதான். அந்த கிணறை நானும், என் தம்பியான 2ம் பிரதிவாதியும் பயன்படுத்தி வருகிறோம் என்றால் சரியல்ல, நான் சொந்தமாக கடன் பெற்ற அந்த கிணற்றை வெட்டினேன். நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தை படித்துப் பார்த்துள்ளேனா என்றால் இல்லை என்று சாட்சி கூறிவிட்டு, தற்போது படித்துப் பார்த்தேன் என்று கூறுகிறார். அந்த நிருபண வாக்குமூலத்தில் தவறான சங்கதிகள் தெரிவிக்கப்பட்டுள்ளன என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை படித்துப் பார்த்தேனா என்றால் படித்துப் பார்க்கவில்லை. 2ம் பிரதிவாதிக்கு உயில் மூலமாக சொத்துக்களை ஒதுக்காமலும், பாகம் கொடுக்காமலும் அவரை ஏமாற்றி வருகிறேன் என்றால் சரியல்ல. இதுவரை 2ம் பிரதிவாதி எந்த சொத்தையும் அனுபவிக்கவில்லை என்றாலும், அனைத்து சொத்துக்களையும் நான்தான் அனுபவித்து வருகிறேன் என்றாலும் சரியல்ல, அவர்தான் அனுபவித்து வருகிறார். நான் ஏமாற்றுக்காரர் என்பதால் பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சுயமாக ஏதேனும் சொத்து சம்பாதித்துள்ளேனா என்றால் 67 செண்டு நிலம் 1990ல் கிரையம் பெற்றுள்ளேன். நான் உயிலில் உள்ள சொத்துக்கள் தவிர சில சொத்துக்களை வெளியில் சொல்லாமல் அனுபவித்து வருகிறேன் என்றால் சரியல்ல.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் தற்போது இருக்கும் ஊர் என்ன என்றால் சுந்தரராஜ்புரத்தில் இருக்கிறேன். என் பெற்றோரின் பூர்வீக ஊர் எது என்றால் சுந்தரராஜபுரம் ஆகும். என் அம்மாவின் ஊர் திருக்கலாம்பட்டி, அது எங்கு உள்ளது என்றால் சிவங்கை மாவட்டத்தில் உள்ளது. என்

**O.S. No.111/2012, Date:25/07/2019**

**பி.வா.சா-1 திரு.பழனியப்பன், த-பெ.சுப்பன் செட்டியார்**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

அம்மாவும், அப்பாவும் வேறு, வேறு சாதிகள் என்றால் சரிதான். என் அப்பா செட்டியார் இனத்தைச் சேர்ந்தவர் என்றால் சரிதான். என் அம்மா பள்ளர் வகுப்பைச் சேர்ந்தவர் என்றால் சரிதான். என் பெரியம்மா இறந்த பின்னர்தான் என் அம்மாவை என் அப்பா இரண்டாம் திருமணம் செய்தார் என்றால் சரியல்ல, என் பெரியம்மா உயிரோடு இருக்கும் போதே குழந்தை இல்லை என்பதால் என் அப்பா, என் அம்மாவை இரண்டாம் திருமணம் செய்தார். என் அப்பாவின் அப்பா பெயர் என்ன என்றால் ஞாபகமில்லை. என் தாத்தா மற்றும் அப்பா ஆகியோர் பரம்பரை பணக்காரர்கள் என்றால் இல்லை. என் அம்மா தற்போது உயிரோடு உள்ளார் என்றால் சரிதான். வாதி, நான், மற்றும் 2ம் பிரதிவாதி ஆகியோர் இதுவரை பாகப்பிரிவினை செய்து கொண்டோமா என்றால் இல்லை. ஏன் பாகம் செய்து கொள்ளவில்லை என்றால் வாதி பாகம் செய்து கொள்ள தயாராக இல்லை. இந்த வழக்கின் தரப்பினர் அனைவரும் இதுவரை பாகப்பிரிவினைக்கு முயற்சித்தோமா என்றால் இல்லை. மல்லிகாவிற்கு திருமணமாகி எத்தனை வருடம் ஆகிறது என்றால் 40, 45 வருடம் ஆகிறது. நான் தாக்கல் செய்துள்ள உயில் ஆவணம் மல்லிகாவை கட்டுப்படுத்தி எழுதப்பட்டுள்ளதா என்றால் அவரையும் கட்டுப்படுத்திதான் எழுதப்பட்டுள்ளது. உயில் விபரத்தை மல்லிகாவிடம் சொன்னோமா என்றால் இல்லை, மல்லிகாவிற்கு உயிலின்படி எதுவும் வராது. உயிலில் என்னென்ன சொத்துக்கள், யார், யாருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்பது தெரியாது என்றால் சரிதான். மல்லிகாவிற்கு திருமணமான பின்னர் அவருக்கு சொத்து, சீர்வரிசை கொடுக்கப்பட்ட விபரம் தெரியுமா என்றால் தெரியாது. இதுவரை மல்லிகாவிற்கு எந்த சொத்தும் கொடுக்கவில்லை என்றால் 67 செண்டு சீதனமாக கொடுத்துள்ளேன். இந்த 67 செண்டு தவிர வேறு சொத்துக்கள் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். 67 செண்டு சீதனமாக கொடுத்துள்ளது குறித்து ஆவணம் உள்ளதா என்றால் உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள கிரய ஆவணங்கள் பி.வா.சா.ஆ.2 முதல் 5 ஆகியவை யார், யாருக்கு, எழுதிக் கொடுத்துள்ளது, சாட்சிகள் விபரம் தெரியுமா என்றால் தெரியாது. அந்த பத்திர விபரங்களை படித்துப் பார்க்கவில்லை என்றால் சரிதான், படித்துப் பார்க்க இயலாத அளவில் கூட்டு எழுத்தில் எழுதியுள்ளார்கள். என் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சாட்சிகள் பட்டியில் காணப்படும் வெள்ளைச்சாமி, ராசு என்ற முத்துக்கருப்பன், பெரியணன், சின்னக்கருப்பன் ஆகிய இவர்கள் யார் என்றால் இவர்கள் உயிலில் சாட்சி கையெழுத்துச் செய்துள்ளவர்கள்

**O.S. No.111/2012, Date:25/07/2019**

**பி.வா.சா-1 திரு.பழனியப்பன், த-பெ.சுப்பன் செட்டியார்**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

ஆவார்கள். இதுவரை பலமுறை வாதி என்னிடம் சொத்து கேட்டுள்ளார் என்றாலும், நான் அவருக்கு கொடுக்காமல் ஏமாற்றி வருகிறேன் என்றாலும் சரியல்ல. வாதி மல்லிகா திருமணமானதிலிருந்து, இன்று வரைக்கும் விவசாயம் என்னுடன் சேர்ந்துதான் பார்த்து வருகிறார் என்றால் இல்லை. நான் மற்றும் என் தம்பி 2ம் பிரதிவாதி ஆகியோர் சிறுவயதாக இருக்கும் போது வாதிதான் எங்களை பராமரித்து வந்துள்ளார் என்றால் சரியல்ல. இந்த சொத்துக்கள் அனைத்தும் பூர்வீக சொத்துக்கள் என்பதால் நான் வாதிக்கு பாகம் கொடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. உயிலை பற்றி எனக்கு எந்த விபரமும் தெரியாது என்றால் சிறுவயதில் எழுதப்பட்டதால் தெரியாது. அந்த உயில் ஆவணம் மோசடியாக தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் அப்பா இறப்பதற்கு எத்தனை வருடம் முன்பாக உயில் எழுதி வைத்தார் என்றால் ஞாபகமில்லை. உயில் எழுதும் போது எனக்கு எத்தனை வயது என்றால் 12 வயது ஆகும். என் தம்பிக்கு அப்போது என்ன வயது என்றால் சுமார் 2 வயது இருக்கும். உயில் எழுதும் போது நானும், என் தம்பியும் மைனர்கள் என்றால் சரிதான். உயில் எழுதப்பட்டு எத்தனை வருடம் கழித்து சொத்தை நான் பொறுப்பெடுத்துக் கொண்டேன் என்றால் என் அம்மாதான் முதலில் பொறுப்பெடுத்தக் கொண்டார். உயில் எழுதி வைத்து எத்தனை வருடமாக என் அம்மா பொறுப்பெடுத்துக் கொண்டார் என்றால் சுமார் 30 வருடமாக கவனித்து வந்தார். நான் மல்லிகாவிற்குரிய பாகம் கொடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை